சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் –இட ஒதுக்கீடு அருந்ததியர் சமூகத்திற்கு உள் இட ஒதுக்கீடு பற்றி ஆய்வு செய்ய – ஒரு நபர் குழு அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே2) துறை

அரசாணை (நிலை) எண்: 37 நாள்: 25.3.2008

சர்வஜித், பங்குனி 12, திருவள்ளுவராண்டு 2039

படிக்கப்பட்டது

1. அரசாணை(நிலை) எண் 1773, சமூக நலத் துறை, நாள் 23.6.84
2. அரசாணை(நிலை) எண் 1090, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 22.6.1990
3. அரசு நேர்முகக் கடித எண்.2979/பமே2/2008–1, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 25.2.2008

---

ஆணை:

ஆதி திராவிட மக்களில், அருந்ததியினர், சமூக, பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதால் அவர் தம் முன்னேற்றத்திற்கு சிறப்பு சலுகைகள் அளிப்பது அவசியம் என கருதி, தற்போது ஆதி திராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டில் இவர்களுக்கு தனி உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி அனைத்து கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவு செய்ய அரசு கருதி, அவ்வாறே அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டம் 12.3.2008 அன்று நடத்தப்பட்டது. அக்கூட்டத்தின் முடிவில் கீழ்க்கண்டவாறு ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

"சமூக, கல்வி, பொருளாதார நிலைகளில் அடித்தளத்திலே உள்ள ஆதி திராவிட மக்களுக்குள்ளேயே அருந்ததியர் எனப்படுவோர் மிகவும் பின் தங்கிய நிலையிலே இருப்பதால், அவர்களை கை தூக்கி விடும் முயற்சிகளில் ஒன்றாக, தற்போது ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டில் இவர்களுக்கு தனி உள் ஒதுக்கீடு வழங்கிடவும், அருந்ததியர் எனப்படுவோருள் எந்தெந்தப் பிரிவினரை உள்ளடக்குவதென்றும், அந்த மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் இட ஒதுக்கீட்டின் அளவைப் பற்றியும், விரிவான முறையில் விசாரித்தறிந்து, அண்மையில், மத்திய அமைச்சரவையில் எடுத்த முடிவின்படி அமைந்துள்ள கமிஷனின் நிலையையும் ஆராய்ந்து ,தேவைப்பட்டால் அவர்களையும் கலந்து கொண்டு அரசுக்கு பரிந்துரை செய்திட உயர்நீதி மன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற நீதியரசரைக் கொண்ட ஒரு நபர் குழு அமைப்பதென்றும், அந்தக் குழுவின்

அறிக்கையை ஆறு மாதக் காலத்திற்குள் பெற்று, அதை நடைமுறைப்படுத்துவது பற்றி அரசு முடிவெடுப்பது என்றும், இந்த அனைத்து அரசியல் கட்சிகளின் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது."

2. மேற்கண்ட தீர்மானத்திற்கேற்ப நடவடிக்கை எடுத்து, அரசுக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கப்பட, சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களைக் கொண்டு ஒரு நபர் குழு அமைத்து அரசு ஆணையிடுகிறது.

3.. இந்த ஒரு நபர் குழு தன்னுடைய அறிக்கையை 6 மாத காலத்திற்குள்ளாக அரசுக்கு அளிக்கும் எனவும், அதை நடைமுறைப்படுத்துவது பற்றி அரசு முடிவு எடுக்கும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வ. கனகராஜ்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
திரு. எம்.எஸ்.ஜனார்த்தனம்,
நீதியரசர்
பிளாட் நெ.980, டாக்டர் லட்சுமணசுவாமி சாலை,
சென்னை–78
இயக்குநர், ஆதி திராவிடர் நலம், சென்னை–5
ஆணையர், பழங்குடியினர் நலம், சென்னை–5
முதலமைச்சர் அலுவலகம், சென்னை
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர்(ஆதிதிராவிடர் நலம்) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
அவர்களின் தனிச் செயலர், சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.








# Panel to look into reservation for Arundathiyars

A retired High Court judge will go into the modalities of providing reservation to Arundathiyars within the existing quota of reservation for Scheduled Castes, a resolution adopted at an all-party meet on March 12 in Chennai here decided. The one-man commission will also discuss the issues with a committee constituted by the Centre on Scheduled Castes, and will submit its recommendation in six months. The reservation for Arundatiyars will be implemented immediately thereafter.

A majority of the 24 political parties that took part in the all-party meet called to discuss reservation for Arundathiyars welcomed the government's move and pledged their support.

Chief Minister Kalaignar M.Karunanidhi, in his address, said soon after the DMK government came to power for the first time in 1969, it appointed a committee under A.N. Sattanathan to look into the welfare of the oppressed classes. It was based on the recommendations of the committee that the 16 per cent reservation for the SCs and Scheduled Tribes in education and jobs was increased to 18 per cent.

After this, in 1990, adhering to a judgement of the Madras High Court and taking into consideration the population of the scheduled castes, the entire 18 per cent reservation was given to them and a separate 1 per cent reservation was given to STs. There are 36 castes listed as STs and 76 castes as SCs. Arundathiyar caste is one among the 76.

Kalaignar asserted that the government was committed to the principle of reservation in jobs and educational institutions for the oppressed classes. As per the 2001 census, the population of the State was 6.24 crore. Of this, Scheduled Castes constituted 1.18 crore.

In his concluding remarks, Kalaignar clarified that it was unfortunate that Krishnasamy had staged a walkout. The Chief Minister said it was regrettable that Krishnasamy had told mediapersons that it was a meeting to mislead the community.

"This charge is totally false. The government acts with good inten- tion, but it is wrong to pinpoint that the entire effort is a total failure if some mistakes are committed by officials," he added.

Referring to one example, he said it has been brought to his notice that though reservation for Christians and Muslims was provided for, there was a problem when it came to the implementation for Muslims.

"It is true that 3.5 percent reservation is not being provided to Muslims," he said. He had convened meetings of officials to make sure such problems did not occur in future, he added.